†
JMJ

VERITAS





இன்றைய அர்ச்சிஷ்டவர் திருநாள்

பாத்திமா-நூறு
1917-2017

பிப்ரவரி 04ம் தேதி

ஸ்துதியரும் மேற்றிராணியாருமான அர்ச்.கோர்சினி பெலவேந்திரர் திருநாள்.

இவர் இத்தாலியிலுள்ள ஃபுளாரன்ஸ் நகரில், கோர்சினி என்கிற ஓர் உயர்குடும்பத்தில், இவருடைய பெற்றோர்களின் இடைவிடாத ஜெபத்தின் பலனாக, அவர்களுக்குக் குழந்தையாகப் பிறந்தார். உடனடியாக, இவருடைய பெற்றோர்கள், தங்கள் குழந்தையை மகா பரிசுத்த தேவமாதாவிற்குக் காணிக்கையாக அர்ப்பணம் செய்தார்கள். இவர் என்னவாகப்போகிறார், என்பதைப் பற்றி, இவர் வயிற்றிலிருந்தபோது, இவருடைய தாய், ஒரு ஓநாயைப் பெற்றெடுத்ததாகவும், அந்த ஓநாய், அருகிலிருந்த கார்மல் துறவற மடத்தின் தேவாலயத்தை நோக்கி ஓடியதாகவும், தேவாலயத்தின் நுழைவாயில் மண்டபத்தை அடைந்ததும், உடனே, அந்த ஓநாய், ஒரு செம்மறியாக உருமாறியதாகவும், ஒரு கனவு கண்டார்கள்.

இளம் வயதில், இவருடைய குடும்ப அந்தஸ்திற்கேற்ப பக்தியுடன் நன்கு வளர்க்கப்பட்டார்; நல்ல கல்வி இவருக்கு அளிக்கப்பட்டது; ஆனால், நாளடைவில், இவர் கெட்ட பழக்க வழக்கங்களுக்கு



உட்பட்டார். அதற்காக இவரை இவருடைய தாயார் அடிக்கடி கடிந்து கொண்டார்கள்; அதில் மிகமோசமான நிலையை அடைந்தபோது, இவருடைய பக்தியுள்ள நல்ல தாயார், இவர் பிறப்பதற்கு முன், இவரைப் பற்றி தான் கண்ட கனவைப் பற்றி எடுத்துரைத்தார்கள்: அதே சமயம், இவருடைய பெற்றோர்கள், தாங்கள் செய்த நேர்ச்சையின்படி, குழந்தையாகப் பிறந்ததும், இவரை, மகா பரிசுத்த தேவமாதாவிற்கு அர்ப்பணித்ததைப் பற்றியும் கூறினார்கள்; இவர் தேவசிநேகத்தினால் பற்றியெரிந்தவராக, கார்மெல் துறவற சபையில் சேர்ந்தார். இச்சமயம், இவரை பசாசு பெரும் சோதனைகளால் அலைக்கழித்தது; ஆனால், துறவற சபையில் சேர்வதற்காக இவர் கொண்டிருந்த திடமான தீர்மானத்தை , அவற்றால் ஒன்றும் செய்யக்கூடாமல் போனது. பாரீஸ் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்; அங்கே பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு, சொந்த நாட்டிற்குத் திரும்பினார்; டஸ்கனியிலுள்ள கார்மெல் துறவற மடத்தின் அதிபரானார்.வாழ்நாள் முழுவதும், மகா பரிசுத்த தேவமாதாவின் மீதான பக்தியைப் பரப்பி வந்தார்; பரலோக இராக்கினியைப் பற்றிய புகழ்ச்சி மகிமைகளைப் பரப்பி வந்தார்.ஜெப தப ஒறுத்தல் நிறைந்த உத்தம துறவியாக ஜீவித்துவந்தார்; உத்தமதனத்தின் உச்ச நிலையை அடைந்து, சிறந்த கார்மெல் சபைத் துறவியாக ஜீவித்து வந்தார்.

இச்சமயம், ஃபியசோல் நகர மேற்றிராணியார் இறந்தார். உடனே, அந்நகர மக்கள், இவரை அவர்களுடைய மேற்றிராணியாராகத் தேர்ந்தெடுத்தனர். அவ்வுன்னத பதவிக்கு தான் அருகதையற்றவன், என்று எண்ணியபடி, அர்ச்.கோர்சினி பெலவேந்திரர், நீண்ட காலமாக, வெளி உலகத்திற்கு, ஒளிந்திருந்தார். ஆனால், ஒரு சமயம், நகரத்திற்கு வெளியே ஒளிந்திருந்த இவரை, ஒரு குழந்தை புதுமையாகப் பேசிக் காட்டிக் கொடுத்தது. உடனே, இது தேவ சித்தம் என்பதை உணர்ந்தவராக, இவர் மேற்றிராணியார் பட்டத்தை ஏற்றுக் கொண்டார்.



இப்பதவிக்கு உயர்த்தப்பட்ட போது, இவர், இதுவரை இல்லாத அளவிற்கு கூடுதல் அதிகமாக தாழ்ச்சியை அனுசரித்தார். அப்புண்ணியத்தை இவர் ஜீவிய காலமெல்லாம் ஏற்கனவே மிக உத்தம விதமாக, எப்போதும், அனுசரித்திருந்தார். ஆத்துமங்கள் மேல் ஞான மேய்ப்பரான மேற்றிராணியார் கொண்டிருக்க வேண்டிய கனிவு மிகுந்த இரக்கத்துடன் கூட, ஏழைகளுக்கு தர்மம் அளித்து, அவர்களைப் பராமரிப்பதிலும், இடைவிடாமல் ஜெபிப்பதிலும், இரவு நேரங்களில், மகா பரிசுத்த தேவநற்கருணைப் பேழையின் முன் கண்விழித்து, தேவசிநேக முயற்சிகள் செய்தபடி, நேச ஆண்டவருடன் சல்லாபித்துக் கொண்டிருப்பதிலும், மற்ற எல்லா புண்ணிய முயற்சிகளிலும் தன்னிகரற்று சிறந்து விளங்கினார். தீர்க்கதரிசன வரத்தையும் கொண்டிருந்த இவருடைய அர்ச்சிஷ்டதனத்தை சகல மக்களும் ஏற்று, இவரைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.பரலோக செம்மறியானவரின் திருமண விருந்திற்கு, 1373ம் வருடம் இவரும் அழைக்கப்பட்டார்; இவருடைய ஜீவிய காலத்தில், இவருக்கு மனந்திரும்புதல் என்கிற உன்னதமான தேவ வரப்பிரசாதத்தைப் பெற்றுத் தந்தவர்களும், உத்தமதனத்தின் மிக உயரிய நிலையை அடையும்படியாக, அர்ச்சிஷ்டதனத்தின் உச்சித நிலைக்கு அழைத்துச் சென்றவர்களுமான, மகா பரிசுத்த தேவமாதாவின் வல்லமையுள்ள பரிந்துரையை, இவர் தனது இவ்வுலக ஜீவியத்தின் இறுதி மணி நேரத்தில்,மிகவும் அனுபவித்து பாக்கியமான மரணத்தை அடைந்து, நித்திய மோட்ச மகிமையை அடைந்தார்.

ஸ்துதியரும், மேற்றிராணியாருமான அர்ச்.கோர்சினி பெலவேந்திரரே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!

அர்ச்.அமலோற்பவ மாமரியே! வாழ்க!